முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 846

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.01.2022, சனிக்கிழமை

1. பிரம்ம ஞானியே அரங்கா போற்றி
   பிரம்ம சூட்சுமம் அறிந்தாய் போற்றி
   வரங்கள் பல என்பால் பெற்று
   வாழும் ஞானியே தேசிகா போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
   புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (பிலவ வருடம் தை மாதம் 9ம் நாள், 22.01.2022 சனிக்கிழமை)
   ஆற்றல்பட அரங்கனோடு ஆறுமுகன் யான்
   அற்புதம் கலியில் நிகழ்த்த வேண்டி
3. வேண்டியே மகா அவதாரம் புரிந்து
   வையகத்தில் மாதர்மம் செய்துவர
   வருகின்ற அரங்கன் தர்மமே
   வையகத்தை காத்து வழி நடத்தும்
4. தருகின்ற அரங்கன் உபதேசமே
   தரணியை ஞானயுகமாக மாற்றம்செய்யும்
   செய்யவே அரங்கன் சீடர்களாகி
   ஜெகமெங்கும் சேவையாற்றுகின்ற
5. ஐயன் அரங்கரின் தொண்டர் பெருமக்களே
   அகிலத்தை மாற்றும் மகா சக்திகளாவர்
   ஆகவே அரங்கன் தர்மத்தை அகிலம் எங்கு ஏற்கின்றதோ
   அந்த உலகமெல்லாம் அற்புதத்தை அடையக்கூடும்
6. கூடாத மாச்சரியங்கள் உலகை விட்டு ஓடி
   குவலயமே தக்க பாதுகாப்படைய நேரும்
   ஈடேறும் எங்கும் பாதுகாப்பு
   இணையில்லாத ஆறுமுகன் என் சக்தி பரவி
7. பரவியே கலியின் துன்பங்கள் ஓடி
   பழுதில்லாத ஞானயுகமாற்றமாக
   துறவி அரங்கன் தயவாலே பேருலகம்
   துணிந்த தொண்டர்களின் துணையாலே உடன் வெற்றி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–